S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE ஞாயிறு நவம்பர் 09 * 2025 * மலர் -1 * இதழ்-161* VOL-1 * ISSUE-161 விலை ரூ.3 * பக்கம் -4

### 'அறிவுத் திருவிழா ' என்ற பெயரில்

# தி.மு.க. கொடி அறிமுக 75-வது ஆண்டு விழா!



## முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!!

**சென்னை, நவ.9**

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தி.மு.க. 75 அறிவுத் திருவிழாவை முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார். இதில் முற்போக்கு புத்தகக் காட்சி , காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' நூல் வெளியீடு நடைபெற்றது. 2 நாட்கள் நடக்கும் விழாவில் கருத்தரங்கம் நடக்கிறது.

தி.மு.க.பவள விழா இளைஞர் அணி `தி.மு.க. 75 அறிவுத் திருவிழா'வாகக் கொண்டாடப்படுகிறது. தி.மு.க.தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் வழிகாட்டலில் இளைஞர் அணிச் செயலாளரும் துணைமுதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில் திராவிட மாடல் பயிற்சி பாசறைக் கூட்டங்கள், சட்டமன்றத் தொகுதி தோறும் கலைஞர் நூலகம், முரசொலி பாசறைப் பக்கம், முத்தமிழறிஞர் பதிப்பகம்', இளம் பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்து கருத்தியல் பயிற்சி அளிப்பது, கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம், கலைஞர் நிதி நல்கை திட்டம் ஆகிய கருத்தியல் பணிகளை தொடர்ந்து செய்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் 75–ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இளைஞர் அணி சார்பில் தி.மு.க 75 அறிவுத் திருவிழா என்னும் நிகழ்ச்சியை நடத்துகிறது.

அந்த வகையில் சென்னை, வள்ளுவர்கோட்டத்தில், தி.மு.க இளைஞர் அணி சார்பில் `தி.மு.க 75 – அறிவுத் திருவிழா என்னும் நிகழ்ச்சி இன்று (நவ.8) காலை தொடங்கியது. இதையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின், காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' நூலை வெளியிட்டு, இருவண்ணக்கொடிக்கு வயது 75 என்ற கருத்தரங்கத்தையும் முற்போக்கு புத்தகக் காட்சி'யையும் தொடங்கி வைத்தார். இதில் 75 ஆண்டுகால வரலாறு கொண்ட தி.மு.க. வின் அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாட்டுத் தளங்களில் ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்து எழுத்தாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், சமூக மற்றும் அரசியல் இயக்கங்களைச் சேர்ந்தவர்கள், தேசியக் கட்சித் தலைவர்கள், கழகத் தலைவர் உள்ளிட்ட தி.மு.க தலைமைக்கழக நிர்வாகிகள் எழுதிய கட்டுரைகள் அடங்கிய, 1,120 பக்கங்கள் கொண்ட காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு என்னும் புத்தகம், முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் சார்பில் உருவாகியுள்ளது. இந்த ஆவணத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார். கட்சி பொதுச்செயலாளரும் , நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கட்சி முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள், இளைஞர் அணிச் செயலாளரும் , துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் மற்றும் இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் முன்னிலையில் தன்மானம் காக்கும் கழகம் மேடை நாடகம் நடைபெற்றது. தொடர்ந்து காலை 11. 30 மணிக்கு இருவண்ணக் கோடிக்கு வயது 75 என்ற தலைப்பில் கருத்தரங்கு நடந்தது.

இதற்கு திராவிட இயக்க ஆய்வாளர்க.திருநாவுக்கரசு தலைமை வகித்தார். துணைப் பொதுச் செயலாளர்கள் திருச்சி சிவா எம்.பி., ஆ.ராசா, கொள்கை பரப்பு செயலாளர் ரா. தி.சபாபதி மோகன் ஆகியோர் பேசினார்.

### காஷ்மீரில்

# ராணுவம் அதிரடி வேட்டையில் 2 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை!

**ஸ்ரீநகர், நவ.09–**

காஷ்மீரில் பதுங்கியிருந்த 2 தீவிரவாதிகள் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். ராணுவம் இந்த அதிரடி நடவடிக்கையை எடுத்துள்ளது. காஷ்மீரில் 1989 முதல் தீவிரவாத ஊடுருவல் நிகழ்ந்து வருகிறது. அவர்களால் அப்பாவி மக்களும், பாதுகாப்பு வீரர்களும் உயிரிழந்துள்ளனர்.

இந்த தீவிரவாதிகளை ஒடுக்க மத்திய அரசும் கடும் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதுவரை பல்லாயிரக்கணக்கான தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளார்கள். இருந்தாலும் பாகிஸ்தான் ராணுவம் தொடர்ந்து தீவிரவாதிகளை அனுப்பி வருகிறது. இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் பகல்ஹாமில் தீவிரவாதிகள் நடத்திய கொடூரத்தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து இந்திய அரசு ஆபரேசன் சிந்தூர் என்ற பெயரில் மிகப்பெரிய நடவடிக்கையை எடுத்தது. பாகிஸ்தானிலும், அதன் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த தீவிரவாத முகாம்கள் தகர்க்கப்பட்டன. இதனால் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே சிறிய அளவிலான போரும் ஏற்பட்டது. ஆபரேசன் சிந்தூர் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் அந்த திட்டம் அப்படியே நிலுவையில் இருப்பதாக பிரதமர் மோடி அறிவித்திருந்தார். அவரது இந்த எச்சரிக்கையை தொடர்ந்து பாகிஸ்தானில் இருந்து தீவிரவாதிகள் அதிகம் ஊடுருவி வரவில்லை. அத்துடன் பெரிய தாக்குதலும் நடக்கவில்லை.

அதே நேரத்தில் காஷ்மீருக்குள் ஏற்கனவே வந்து பதுங்கியிருந்த தீவிரவாதிகளை இந்திய வீரர்கள் வேட்டையாடினார்கள். இன்னும் ஒருசில தீவிரவாதிகள் எஞ்சி இருப்பதாக கூறப்படு கிறது. அவர்களை தொடர்ந்து வேட்டையாடும் பணியில் பாதுகாப்பு வீரர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் குப்வாரா மாவட்டத்தில் காட்டுப் பகுதியில் சில தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக பாதுகாப்பு வீரர்களுக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து அவர்களை வேட்டையாட வீரர்கள் தயாரானார்கள்.

நேற்று தேடுதல் வேட்டை தொடங்கியது. அப்போது பதுங்கியிருந்த தீவிரவாதிகள், பாதுகாப்பு வீரர்களை நோக்கி சுடத் தொடங்கினர். பதிலுக்கு வீரர்களும் சுட்டார்கள்.

இந்த சண்டையில் 2 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேலும் அங்கு தேடுதல் வேட்டை நடந்து கொண்டிருக்கிறது.



நாமக்கல் மாநகராட்சி திருமண மண்டபத்தில் வேளாண்மைத்துறையின் சார்பில், தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் – ஊட்டமிகு சிறுதானியங்கள் திட்டத்தின் கீழ் சிறுதானிய உணவு திருவிழாவை அமைச்சர் மதிவேந்தன் தொடங்கி வைத்து பார்வையிட்டார். அருகில் மேயர் கலாநிதி உள்பட பலர் உள்ளனர்.

# மரத்தில் பைக் மோதி மில் தொழிலாளி பலி!

### நண்பர் படுகாயம்!!

**ராஜபாளையம், நவ.09–**

ராஜபாளையத்தில் மரத்தில் பைக் மோதி மில் தொழிலாளி பலியானார் நண்பர் படுகாயமடைந்தார்.

ராஜபாளையம் அருகே சேத்தூர் மேட்டுப்பட்டியைச் சேர்ந்த மாரியப்பன் என்பவரது மகன்கள் இசக்கிராஜ் (21), முத்துராஜ் (27). இவர்கள் இருவரும் மில் தொழிலாளர்களாவர். ராஜபாளையத்திலுள்ள நூற்பாலைக்கு இருவரும் இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள். பெரியகுளம் ஆற்றுப்பாலம் அருகே தனியார் ஹோட்டல் எதிரே வரும் போது நிலை தடுமாறியதில் கட்டுப்பாட்டையிழந்த இருசக்கர வாகனம் சாலை ஓரமிருந்த மரத்தில் மோதியது. இதில் படுகாயமடைந்த இசக்கிராஜ் நிகழ்விடத்திலேயே பலியானார். முத்துராஜ் (27) மீட்கப்பட்டு ராஜபாளையம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது குறித்து சேத்தூர் புறக்காவல் நிலைய காவல் துறையினர் விசாரித்து வருகின்றனர்.



குன்னூர் பகுதியில் சமீபத்தில் பெய்த மழையால் தேயிலை செழித்து வளர்ந்து பச்சை பசேலென்று காட்சியளிக்கிறது.



கோவை மாவட்டம், வால்பாறை அருகே ஆழியாறு அணை பகுதியில் மலை அடிவாரத்தில் உள்ள வயல்களில் நெற்கதிர் அறுவடை தற்போது முடிந்து உள்ளது.

### பொள்ளாச்சி அருகே விபத்து:

# மொபட் மீது கார் மோதி தாத்தா-பேத்தி சாவு!

### 3 பேர் படுகாயம்!!

**பொள்ளாச்சி, நவ.09–**

பொள்ளாச்சி அருகே இன்று மொபட் மீது கார் மோதியது. இதில் தாத்தா பேத்தி பலியானார்கள். 3 பேர் படுகாயமடைந்தனர்.

ஈரோடு மாவட்டம் பொள்ளாச்சி அருகே கிணத்துக்கடவு அடுத்துள்ள கோவில்பாளையம், காளியண்ணன் புதூர் பகுதியைச் சேர்ந்தவர் முருகேசன் வயது (56) கூலி தொழிலாளி. இவர் இன்று தனது மனைவி ஜோதி (46) இவர்களது மகள் திருப்பூர் மாவட்டம் ,மூலனூரைச் சேர்ந்த சந்தோஷ் மனைவியுமான சந்தியா (25) பேத்தி கனிஷ்கா (3) பேரன் கவீஸ் (1) ஆகிய 5பேரும் ஒரு மொபட்டில்



கோவை –பொள்ளாச்சி நான்கு வழிச்சாலையில் கோவில் பாளையம் வந்து கொண்டிருந்தனர். கோவை ,காமராஜர்புரம், கிருஷ்ணசாமி ரோடு பகுதியில் வசித்து வரும் துரைராஜ் (60) என்பவர் அந்த வழியாக எலக்ட்ரிக் காரை ஓட்டி வந்தார் கண்ணிமைக்கும் நேரத்தில் அந்த கார், எதிர் திசையில் வந்த மொபட் மீது எதிர்பாராத விதமாக பலமாக மோதியது. இதில் மொபட்டில் வந்த 5 பேரும் பலத்த காயமடைந்தனர். முருகேசன் அவரது பேத்தி கனிஷ்கா ஆகிய இருவரும் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்தனர். இந்த விபத்தில் காயம் அடைந்த ஜோதி,சந்தியா, ஒன்றரை வயது ஆண் குழந்தை ஆகியோர் சிகிச்சைக்காக பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் மூன்று பேருக்கும் பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர் . இந்த சம்பவம் குறித்து கிணத்துக்கடவு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### புளியங்குடியில்

# காவல்நிலையம் முன்பு தீக்குளிக்க முயன்ற பெண்!

### நிலத்தகறாரால் விபரீத முடிவு!!

**நெல்லை, நவ.09–**

புளியங்குடியில் நிலத்தகராறில் காவல்நிலையம் முன்பு உடலில் மண்ணெண்ணெயை ஊற்றி தீக்குளிக்க முயன்ற பெண்ணால் பரபரப்பு ஏற்பட்டது.

தென்காசி மாவட்டம் புளியங்குடியை அடுத்த சிந்தாமணி அம்பேத்கார் 5–வது தெருவை சேர்ந்தவர் மாரியப்பன். இவரது மனைவி வள்ளியம்மாள்(43). இதனிடையே கடந்த சில மாதங்களுக்கு முன் விவசாயியான மாரியப்பன் தனது வீட்டில் வைத்திருந்த நகைகள் மாயமானதாக புகார் அளித்த நிலையில் அவர் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார்.

இந்த நிலையில் மாரியப்பனின் உறவினர்கள் வேலுச்சாமி, கணேசன், சொக்கன் ஆகியோருடன் வள்ளியம்மாளுக்கு நிலத்தகராறு இருந்து வந்துள்ளது.

இதையடுத்து அந்த நிலத்தில் விவசாயப் பணியை வேலுச்சாமி, கணேசன், சொக்கன் ஆகியோர் தொடங்கி உள்ளனர். அப்போது அங்கு சென்ற வள்ளியம்மாள் தடுத்த நிலையில் அவர்களுக்குள் தகராறு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து வள்ளியம்மாள் நேற்று புளியங்குடி காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்துள்ளார். அப்போது திடீரென வள்ளியம்மாள் காவல் நிலையம் முன்பு உடலில் மண்ணெண்ணெயை ஊற்றிக் கொண்டு தீக்குளிக்க முயன்றார்.

இதை பார்த்த போலீசார் அவரை தடுத்து சிகிச்சைக்காக அங்குள்ள அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் சம்பவம் தொடர்பாக வேலுச்சாமி, கணேசன், சொக்கன் ஆகியோர் மீது போலீசார் வழக்குபதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



விழுப்புரம் மாவட்டம் 74 விழுப்புரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட விழுப்புரம் நகராட்சி மணிமேகலை தெரு பகுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்த பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் விழுப்புரம் வாக்காளர் பதிவு அலுவலர் .முருகேசன், விழுப்புரம் நகராட்சி ஆணையர் வசந்தி, விழுப்புரம் வருவாய் வட்டாட்சியர் திரு.மகாதேவன் உட்பட பலர் உள்ளனர்.

### வடகிழக்கு பருவமழை:

## அரசு துறை அலுவலர்களுடன் நாமக்கல் மாவட்ட அதிகாரி ஆலோசனை!

நாமக்கல்,நவ.9

அனைத்துதுறை அலுவலர்களும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், ஒருங் கிணைந்து பணியாற்ற வேண்டும், என மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஆசியா மரியம் பேசினார்.

நாமக்கல் கலெக்டர் அலுவலகத்தில், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து, அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடந்தது. டி.ஆர்.ஓ., சரவணன் முன்னிலை வகித்தார். மாவட்ட கண்காணிப்பு அலுவலரும், சிறுபான்மை யினர் நலத் துறை ஆணை யருமான ஆசியாமரியம் தலைமை வகித்து பேசும்போது:

முதல்வர் ஸ்டாலின், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார். நாமக்கல் மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக் கையாக, மணல் மூட்டை, பொக்லைன் இயந்திரம், ஜெனரேட்டர், மீட்பு படகுகள், அவசர சிகிச்சை வாகனங்கள், ஆக்சிஜன் உருளைகள் உள்ளிட்ட உப கரணங்கள், இயந்திரங்கள் தயார் நிலையில் உள்ளன.

நாமக்கல் மாவட் டத்தில், கடந்த காலங் களில் பெய்த மழை அடிப்படையில், அதிகளவில் பாதிப்பிற்குள்ளாகும் இடங்களாக, இரண்டு; மிதமாக பாதிப்பிற்குள்ளாகும் இடங்களாக, 30 குறைவாக பாதிப்பிற்குள்ளாகும் இடம், ஒன்று என மொத்தம், 33 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அனைத்து துறை அலு வலர்களும், பொதுமக் களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என்றார்.

கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் வடிவேல், கூட்டுறவு சங் கங்கள் இணைப்பதிவாளார் அருளரசு, ஆர்.டி.ஓ., சாந்தி, அனைத்து துறை அலுவலர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்

## போச்சம்பள்ளியில் 51 வது ஜீனியர் ஆண்கள சாம்பியன்ஷிப் கபாடி போட்டி!

### கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பர்கூர் எம்.ஏல்.ஏ. பங்கேற்பு !!





கிருஷ்ணகிரி,நவ.9

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளியில் தமிழ்நாடு அமெச்சூர் கபாடி கழகம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட அமெச்சூர் கபாடி கழகம் ஆகியவை இணைந்து போச்சம்பள்ளியில் ஆண்டு தோரும் கபாடி நடத்தி வருகிறது. அந்த வகையில் 51வது ஜூனியர் ஆண்கள சாம்பியன் ஷிப் கபாடி போட்டி இன்றுதுவங்கியது. இந்த கபாடி போட்டியை கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார் மற்றும் பர்கூர் எம்.ஏல்.ஏ. மதியழகன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் இருந்து 560 போட்டியாளர்கள் கலந்துக்கொண்டுள்ள இப்போட்டியில் சிறப்பு விருந்தினர்களாக ஆசிய இளையோர் கபாடி போட்டியில் தங் கப்பதக்கம் வென்ற கார்த்திகா மற்றும் ஆசிய கபாடி போட்டியில் தங் கப்பதக்கம் வென்ற அபினேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார் மற்றும் பர்கூர் எம்.ஏல்.ஏ. மதியழகன் ஆகியோர் கார்த்திகா மற்றும் அபினேஷ் ஆகிய இருவருக்கும் சால்வை அணிவித்து மரியாதை செய்தனர். பிறகு வீரர்களுடன் கைகுலுக்கி கபாடி போட்டியை துவக்கி வைத்தனர்.

அப்போது பேசிய கார்த்திகா, தமிழ்நாடு அமெச்சூர் கபாடி கழகம் என்பது திறமைகளை மட்டுமே மையப்படுத்தி வீரர்களை தேர்வு செய்து வருகிறது.

அதற்கு நானே உதாரணம். கபாடி வீரர்கள் புரோ கபாடிகளை இலக்காக வைத்து விளையாடுவதை விட இந்தியாவிற்காக விளையாடி வெற்றிபெற்று தமிழ் நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டுமென பேசினார்.

தமிழ்நாடு அமெச்சூர் கபாடி கழக மாநில தலைவர் சோலைராஜா, தமிழ்நாடு அமெச்சூர் கபாடி கழக மாநில செயலாளர் சபியுல்லா, கிருஷ்ணகிரி மாவட்ட அமெச்சூர் கபாடி கழக மாவட்ட தலைவர் குமார், கிருஷ்ணகிரி மாவட்ட அமெச்சூர் கபாடி கழக மாவட்ட செயலாளர் சக்கரவர்த்தி, உள்ளிட முக்கிய பிரமுகர்கள்பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை கிருஷ்ணகிரி மாவட்ட அமெச்சூர் கபாடி கழக துணை செயலாளர் மடத்தானூர் விக்கிரமன் செய்திருந்தார்.

## ராஜபாளையத்தில் கோயிலுக்கு செல்லும் பக்தர்களை வழிமறித்த விவசாயிகள்!

### அகழி தோண்டி பாதையை மறித்ததால் பரபரப்பு!!



ராஜபாளையம் நவ.9

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் வட மேற்கே அருள்மிகு ராக்காச்சி அம்மன் கோயில் உள்ளது இந்த கோவிலில் ராக்கப்பன் என்ற பூசாரி பராமரித்து வருகிறார் இந்த கோவிலுக்கு செல்வதற்கு அப்பகுதி விவசாயிகளுக்கு பௌர்ணமி பூஜை மற்றும் இதர பூஜைகளில் வழிபாடு செய்ய அனுமதி இல்லாமல் செய்ததாக கூறப்படுகிறது இதனால் விவசாய மேல் விளை நிலங்களில் வழியாக அந்த கோவிலுக்கு செல்லும் பாதையை கொடுத்த விவசாயிகள் அந்த பாதையை வழிமறித்து அகழி தோண்டி தடையை ஏற்படுத்தினார்கள் விவசாயிகள் சந்திரன் ராஜா ராம் மோகன் ராஜா உள்பட ஏராளமான விவசாயிகள் திரண்டு வந்து அந்த கோயிலுக்குசெல்லும்பாதையை ஜேசிபி மூலம் குழி தோண்டி வழிமறித்து தடங்கல் ஏற்படுத்தினார்கள்.

இது குறித்து மம்சாபுரம் போலீசார் மற்றும் வருவாய் துறையினர் விசாரணைமேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.



## விழிப்புணர்வு ஊர்வலம்!

முதுகுளத்தூர் நவ.9

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் வட்டம் வெங்கலக்குறிச்சி அரசு உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியர் மலைச்சாமி தலைமையில் வெங்கலக்குறிச்சி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.டி.செந்தில்குமார் கொடி அசைத்து தொடங்கி வைத்தார், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ஆர். கலைச்செல்வி ராஜசேகர்முன்னிலை வகித்தார், போதைப் பொருள் தடுப்பு போக்சோ தடுப்பு விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. இந்நிகழ்வில்ஆசிரியர்கள், பள்ளி மாணவர்கள் கோசம் எழுப்பி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு செய்தார்கள், கிராமத்தின் சார்பில் சாலமோன் , வேல்முருகன் உடனிந்தார்கள்.

### மொரப்பூர் அருகே

## அரசு பள்ளியில் பீரோவை உடைத்து லேப்டாப் திருட்டு!

தர்மபுரி,நவ.9–

தர்மபுரி மாவட்டம் மொரப்பூர் அருகே உள்ள எம். வெளாம்பட்டியில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி செயல்பட்டு வருகிறது இங்கு தலைமை ஆசிரியராக பையர்நத்தம் பகுதியை சேர்ந்த மரகதம்(54) பணியாற்றி வந்தார் கடந்த செப்டம்பர் 30ல் விருப்ப ஓய்வு பெற்றார் இந்நிலையில் அப்பள்ளியில் பணியாற்றி வரும் ஆசிரியர் சென்னகிருஷ்ணன் என்பவரை பார்க்க பள்ளிக்குச் சென்றுள்ளனர் அப்போது பள்ளியில் உள்ள ஒரு அறையின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது உள்ளே சென்று பார்த்தபோது அங்கிருந்து பீரோவின் கதவை உடைத்து உள்ளே இருந்த 20 ஆயிரம் மதிப்புள்ள இரண்டு லேப்டாப்பை மர்ம நபர்கள் திருடிசென்றது தெரியவந்தது. இது குறித்து மரகதம் மொரப்பூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் போலீசார் வழக்கு பதிவு செய்து லேப்டாப்பை திருடி சென்ற மர்ம நபர்களை தேடிவருகின்றனர்.

## இருசக்கர வாகனம் - வேன் மோதி முதியவர் பலி!

அவிநாசி,நவ.9–

கோவை ரத்தினபுரியை சேர்ந்தவர் சின்னச்சாமி (வயது 60) இவரது மனைவி நாகலட்சுமி. இவர்கள் நேற்று இரவு நம்பியூரில் உள்ள உறவினர் வீட்டிற்கு குடும்பத்துடன் வந்து தங்கி விட்டு இன்று விடியற்காலை 3 மணிக்கு சேவூர் அருகே உள்ள கரடி கோவிலில்சாமிகும்பிட்டு விட்டு அவரது வீட்டிற்கு செல்வதற்காக புளியம்பட்டி அன்னூர் ரோட்டில்அவருக்கு சொந்தமான

இருசக்கர வாகனத்தில் சின்னசாமி வாகனத்தை ஓட்ட அவரது மனைவி நாகலட்சுமி பின்னால் அமர்ந்து கொண்டு நீலிபாளையம் எல்.ஜி. கம்பெனி அருகே வடக்கில் இருந்து தெற்காக வந்து கொண்டிருந்த பொழுது அதே ரோட்டில் ஈச்சர் வேன் மோதி விபத்து ஏற்பட்டது.

தகவலறிந்து சேவூர் போலீசார் அப்பகுதிக்கு சென்றனர். விபத்தில் சின்னசாமிக்கு தலை மற்றும் காலில் பலத்த காயம் ஏற்பட்டும், நாகலட்சுமிக்கு தலையில் ரத்த காயம் ஏற்பட்டது.

போலீசார் அவர்களை அன்னூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். இதில் சிகிச்சை பலனின்றி சின்னசாமி இறந்து விட்டார்.

நாகலட்சுமி மேல் சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனைக்கு சென்றுள்ளார். சேவூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



### திருவெண்ணெய்நல்லூர் அருகே

## தக்கா கிராமத்தில் ரூ.18 லட்சம் மதிப்பில் பள்ளியின் புதிய வகுப்பறை கட்டிடம்!

திருவெண்ணெய்நல்லூர், நவ.9

திருவெண்ணெய்நல்லூர் அருகே உள்ள தக்கா கிராமத்தில் ரூ.18 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் புதிய வகுப்பறை கட்டிடம், ஏமப்பூர், சின்னசெவலை, அண்ராயனூர் ஆகிய பேருந்து நிறுத்தங்களில் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் நிதி மூலமாக தலா ரூ.6 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பயணியர் நிழற்குடை திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட வருவாய் அலுவலர் அரிதாஸ் தலைமை தாங்கினார்.

முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினரும் திமுக விழுப்புரம் மாவட்ட செயலாளர் பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட கவுன்சிலர் விசுவநாதன், ஒன்றியக் குழு பெருந்தலைவர் ஓம் சிவசக்திவேல், மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் சேகர், தாசில்தார் ரகுராமன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாலசுப்பிரமணியன், முல்லை, ஒன்றிய கவுன்சிலர் தனகோட்டி ஸ்ரீதர் முன்னிலை வகித்தனர்.

ஊராட்சி மன்ற தலைவர் சசி வரவேற்றார். பள்ளித் தலைமை ஆசிரியர் ராஜலட்சுமி தொடக்க உரையாற்றினார்.

விழாவில் முன்னாள் அமைச்சரும் திருக்கோவிலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமானக.பொன்முடி கலந்து கொண்டு ரூ.18 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய வகுப்பறை பள்ளி கட்டிடத்தையும் ஏமப்பூர், சின்னசெவலை, அண்ராயனூர் ஆகிய பேருந்து நிறுத்தங்களில் ரூ.6லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பேருந்து நிழற்குடைகளையும் ரிப்பன் பட்டி திறப்பு விழா செய்து சிறப்புரையாற்றினார். இதில் விழுப்புரம் தெற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் சரவணகுமார், திருவெண்ணெய்நல்லூர் மத்திய திமுக ஒன்றிய செயலாளர் சடகோபன், ஒன்றிய பொருளாளர் கிருஷ்ணமூர்த்தி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் நிர்மல்ராஜ், ஒன்றிய துணை செயலாளர்கள் காசி விசுவநாதன், ஏழுமலை, ஒன்றிய விவசாய அணி செயலாளர் வெங்கடேசன், வட்டார வள மையம் மேற்பார்வையாளர் காசிநாதன், வட்டார கல்வி அலுவலர் அம்பிகா உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி இன்று எங்களின் செந்தில் நாயகம் மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணைத்தலைவர் & இளையராஜா மாவட்ட விவசாய அணி அமைப்பாளர்) நாங்கள் கட்டியுள்ள புதிய இல்லங்களின் புதுமனை புகுவிழா அழைப்பிதழை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் அவர்களை நேரில் சந்தித்து அழைப்பிதழை வழங்கிய இனிய தருணம் உடன் எங்களது போச்சம்பள்ளி ஒன்றிய கழகச் செயலாளர் சாந்தமூர்த்தி அழைப்பிதழை வழங்கினார்.



### மேலூரில் வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்:

## மாவட்ட கழகசெயலாளர் ராஜன்செல்லப்பா கட்சி நிர்வாகிகளுக்கு ஆலோசனை!

மேலூர் நவ.9

மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம், மேலூர் சட்டமன்ற தொகுதி அதிமுக சார்பில் 2026 சட்டப்பேரவை வாக்குச்சாவடி பாக முகவர்கள் 2 ஆலோசனை கூட்டம் மூவேந்தர் பண்பாட்டு கழகத்தில் நடைபெற்றது. கழக அமைப்பு செயலாளர், மாவட்ட பொறுப்பாளர் தஞ்சை காந்தி, மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட இளைஞர் இளம் பெண்கள் பாசறை செயலாளரும், மேலூர் சட்டமன்ற உறுப்பினர் பெரியபுள்ளான் என்ற செல்வம், கழக தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் வி.வி.ஆர். ராஜ் சத்யன், புறநகர் மாவட்டஅம்மாபேரவை செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏ கா.தமிழரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கா. பொன்னுச்சாமி, மேலூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் கே.சி. பொன் ராஜேந்திரன், கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றிய கழக செயலாளர், வெற்றிச்செழியன், கொட்டாம்பட்டி வடக்கு ஒன்றியகழகசெயலாளர் குலோத்துங்கன், மேலூர் நகர் கழக செயலாளர் எஸ்.எம்.சரவணகுமார், அ.வல்லாளப்பட்டி பேரூர் கழக செயலாளர் ஏ.கே. உமாபதி ஆகியோர் தலைமை தாங்கினார். மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளரும், திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் வி.வி. ராஜன்செல்லப்பாகலந்து கொண்டு வாக்குசாவடி பாக முகவர்கள் மற்றும் கட்சி நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார் . இந்நிகழ்ச்சியில்மாவட்ட வழக்கறிஞர் அணி செயலாளர் ரமேஷ், மாவட்ட கழக அவை தலைவர் ராஜேந்திரன், மாவட்ட கழக பொருளாளர் அம்பலம், கழகதகவல்தொழில் நுட்ப பிரிவு துணை தலைவர் கௌரி சங்கர், மண்டல தகவல் தொழில் நுட்ப பிரிவு துணை தலைவர் பாலசந்தர், மகளிரணி கண்ணகி பாஸ்கரன், மாவட்ட நிர்வாகிகள் அன்புச்செல்வன், சீனிவாசன், ஜபார், ஏ.வி.பி. பிரபு, மீரா உசேன், அய்யங்காளை, மின்னல் மணி, பொதுக்குழு உறுப்பினர் பாலகிருஷ்ணன், நகர்மன்ற முன்னாள் தலைவர் சாகுல் ஹமீது, கட்சிநிர்வாகிகள், தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை சார்பில் ஆட்டோவாகனம் வாங்க மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ் ராஜலட்சுமி என்பவருக்கு ஆட்டோ வாகனத்தினை மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/தொழிலாளர் நலத்துறை இயக்குநர் எஸ்.ஏ.இராமன், மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில் வழங்கினார். உடன் தொழிலாளர் இணை ஆணையர் ரமேஷ், தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி) மீனாட்சி உட்பட பலர் உள்ளனர்.

# திருப்பத்தூரில் வாக்காளர் சிறப்பு தீவிரத் திருத்தம் (SIR) குறித்து ஆலோசனைக் கூட்டம்!

திருப்பத்தூர் நவ.9

திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட வாணியம்பாடி, ஆம்பூர், ஜோலார்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய சட்ட மன்ற தொகுதி களில் கழகம் சார்பில் வாக்குச்சாவடி களில் நியமிக்கப்பட்டு ள்ள பாக முகவர்கள் (BLA2) மற்றும் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்ட மன்ற உறுப்பினருமான க.தேவராஜி தலைமையில் பொதுப்பணிதுறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர், வடக்கு மண்டல பொறுப்பாளர் மாவட்ட பொறுப்பு அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் திருவண்ணாமலை நாடாளு மன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள்.சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர்கள் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் தொகுதி வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், தகவல் தொழில் தொழில்நுட்ப அணி தொகுதி OTN ஒருங்கிணைப்பாளர்கள். வாக்குச்சாவடி பாக முகவர்கள் (BLA2) கலந்து கொண்டார்கள்.

இறுதியாக நன்றியுரை ஆற்றிய மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வடிவேல். மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன் மற்றும் திமுக கட்சியினர் பலரும் கலந்து கொண்டனர்.

## கொரட்டி அரசு மேல்நிலைப்பள்ளிக்கு

# புதிய நுழைவாயில் கட்டிடத்தை அ.நல்ல தம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!



திருப்பத்தூர் நவ.9

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி கந்திலி ஒன்றித்துக்கு உட்பட்ட கொரட்டி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு, திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ரூ.8இலட்சம் மதிப்பீட்டில் புதிய நுழைவாயில் கட்டிடம் திறப்பு விழா நடைபெற்றது. இதில்,

திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி பள்ளி மாணவர்களுடன் இணைந்து, திறந்து வைத்து, தனது சொந்த நிதியிலிருந்து மாணவர்களுக்கு வினா வங்கியினை அடங்கிய புத்தகத்தை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

திருப்பத்தூர் ஒன்றிய குழுத் தலைவர் திருமுருகன் முன்னிலை வகித்தார். பள்ளி மாணவர்கள் வரவேற்பு வழங்கினர். இந்நிகழ்ச்சியில் கந்திலி ஒன்றிய கழக செயலாளர்கள் குணசேகரன் முருகேசன் மோகன்குமார், ஒன்றிய குழு உறுப்பினர் தாமோதரன், ஊராட்சி மன்ற தலைவர்கள் லட்சுமிகார்த்திகேயன், சண்முகம், பள்ளி இருபால் ஆசிரியர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், பெற்றோர், மாணவ, மாணவிகள் மற்றும் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# "AWS இந்தியாவில் தனது மார்க்கெட் பிளேஸ் தளத்தை பெரிதும் விரிவுபடுத்துகிறது"

சென்னை , நவ.9

அமேசான் வெப் சர்வீசஸ் (AWS) நிறுவனம் தங்கள் AWS மார்க்கெட் பிளேஸ் தளத்தை இந்தியாவில்விரிவுபடுத்துவதாக அறிவித்துள்ளது.

இந்த விரிவாக்கம், இந்திய வாடிக்கையாளர்களுக்கு AWS மார்க்கெட் பிளேஸில் உள்ள மென்பொருள் மற்றும் சேவைகளை இனிமேல் இந்திய ரூபாய் (INR) மதிப்பில் வாங்குவதற்கான வசதியினை வழங்குகிறது.

இதனால், இந்திய வாடிக்கையாளர்கள் உள்ளூர் பில்லிங் மற்றும் கட்டண முறைகள் மூலம் பொருட்களை வாங்க முடியும், மேலும் அவர்களின் ஏற்கனவே நிலுவையில் உள்ள விற்பனையாளர்களுடன் சிறந்த உறவுகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

இந்த விரிவாக்கத்தின் மூலம், இந்தியாவைச் சேர்ந்த சுயாதீன மென்பொருள் விற்பனையாளர்கள் (ISVs), ஆலோசனை நிறுவனங்கள் மற்றும் செனல் பார்ட்னர்கள் தங்கள் தயாரிப்புகளை இந்திய ரூபாயில் விற்பனை செய்ய முடியும். AWS மார்க்கெட் பிளேஸில் தற்போது 70க்கும் மேற்பட்ட மென்பொருள் பிரிவுகளில் 30,000க்கும் மேற்பட்ட தயாரிப்புகள்விற்பனைக்குக் கிடைக்கின்றன. இந்த விரிவாக்கம் இந்தியாவின் தொழில்நுட்ப சந்தையில் புதிய வாய்ப்புகளை உருவாக்கி, வாடிக்கையாளர்களுக்கு முன்னணி நிபுணத்துவத்தை வழங்குகிறது.

AWS நிறுவனத்தின் குளோபல் ஸ்பெஷலிஸ்ட்ஸ் & பார்ட்னர்ஸ் பிரிவின் துணைத் தலைவர் ரூபா போர்னோ மற்றும் AWS இந்தியா மற்றும் தெற்காசியப் பிராந்தியத்தின் பார்ட்னர் பிசினஸ் பிரிவின் தலைவர் பிரவீன் ஸ்ரீதர் இந்த விரிவாக்கத்தின் முக்கிய பங்குதாரர்களாக உள்ளனர். அவர்கள், இந்தியாவின் டிஜிட்டல் பொருளாதார வளர்ச்சிக்கு இந்த மாற்றம் ஒரு உறுதியான மற்றும் அரிய வாய்ப்பாக இருப்பதாக தெரிவித்தனர். AWS மார்க்கெட் பிளேஸ் இல் பல முக்கிய விற்பனையாளர்கள், அதாவது சிஸ்கோ, டெலாய்ட், ஃப்ரெஷ் வொர்க்ஸ், சேல்ஸ்ஃபோர்ஸ் மற்றும் பாலோ ஆல்டோ நெட்வொர்க்ஸ் ஆகியவற்றின் தயாரிப்புகளை இந்தியா முழுவதும் வாங்க முடியும் என கூறினர்.

# கார் மீது பைக் மோதி விபத்து!

நத்தம், நவ,9

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே புதுப்பட்டியை சேர்ந்தவர் சிவக்குமார்(45). தொழிலாளி.இவர் சம்பவத்தன்று தனது பைக்கில் வத்திபட்டிக்கு சென்றுவிட்டு மதுரை துவரங்குறிச்சி நெடுஞ்சாலையில் எதிர் சாலையில் மீண்டும் ஊருக்கு திரும்பி கொண்டிருந்தார். விளாம்பட்டிபள்ளிவாசல் பகுதியில் சென்று கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக கட்டுப்பாட்டை இழந்த பைக் எதிரே வந்த கார் மீது மோதியது.இதில்தடுமாறிகீழேவிழுந்தசிவக்குமாருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. ஆபத்தான நிலையில் அக்கம் பக்கத்தினர் அவரை மீட்டு நத்தம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். பின்னர் அவர் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து நத்தம் போலீஸ்சப் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணகுமார்வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி!

## இந்திய தேர்தல் துணை ஆணையாளர் ஆலோசனை!!

கோவை, நவ.9–

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி ( எஸ்ஐஆர் ) தொடர்பாக ஐந்த மாவட்ட கலெக்டர்கள் பங்கேற்ற இந்திய தேர்தல் ஆணையத்தின் துணை ஆணையாளர் பானுபிரகாஷ்யெதுரு ஆலோசனை மேற்கொண்டார்.

இந்திய தேர்தல் ஆணைய அறிவுறுத்தலின்படி வாக்காளர் பட்டியல் சிறப்புதீவிர திருத்தம்தொடர்பான்பணிகள் மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகின்றன,

இந்தப் பணிகள் தொடர்பான மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டம் கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரியும், அரசுசெயலாளருமானஅர்ச்சனா பட்நாயக். இந்திய தேர்தல் ஆணைய இயக்குநர் கே,கே, திவாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர், இந்திய தேர்தல் ஆணையத்தின் துணை ஆணையாளர் பானுபிரகாஷ்யெதுரு தலைமை வகித்தார்,

இதில் திருப்பூர், ஈரோடு, கோவை, நீலகிரி, சேலம் ஆகிய ஐந்து மவட்டங்களில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது,

மேலும் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட கணக்கெடுப்பு படிவங்களின் விவரங்கள், 18 வயதுக்கு மேற்பட்ட இளம் வாக்காளர்களை சேர்ப்பது இறந்த வாக்காளர்களை நீக்குவது உள்ளிட்ட பல்வேறு

ஆலோசனைகளையும் அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாமக்கல்லில்

# காலி பணியிடங்களை நிரப்பக்கோரி அங்கன்வாடி ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்!

நாமக்கல்,நவ.9–

காலி பணியிடங்களை நிரப்பக் கோரி, நாமக்கல் பூங்கா சாலையில், தமிழ் மாநில அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாவட்ட தலைவர் குர்ஷி

த்பேகம் தலைமை அங்கன்வாடி ஊழியர் மற்றும் உதவியாளர்களை அரசு ஊழியர்களாக மாற்றி, கால முறை ஊதியம் வழங்க வேண்டும்.

உச்சநீதிமன்ற தீர்ப்புப்படி, பணிக்கொடையாக அங்கன்வாடி

ஊழியர்க வகித்தார். இதில், வகித்த ளுக்கு, 10 லட்சம் ரூபாய் ,உதவியாளர்களுக்கு, ஐந்து லட்சம் ரூபாய் வீதம் வழங்க வேண்டும். ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு அகவிலைப்படியுடன் கூடிய ஓய்வூதியமாக, 9,000 ரூபாய் வழங்க வேண்டும். காலி பணியிடங்களைஉடனடியாகநிரப்ப வேண்டும்.

மே மாதம் கோடை விடுமுறை ஒரு மாதம் வழங்க வேண்டும்.

புதிய, '5ஜி' மொபைல் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக் கைகளை வலியுறுத்தி, மொபைல் போனில் உள்ள, டார்ச் லைட்டை ஒளிரவிட்டு கோஷம் எழுப்பினர்.

# தலித் விடுதலை இயக்க மாநிலத்தலைவர் ச.கருப்பையா கோரிக்கை மனு!

ஒட்டன்சத்திரம் நவ.9

தலித் விடுதலை இயக்கத்தின் மாநிலத்தலைவர் ச.கருப்பையா அமைப்பு சார்பாக சென்னை எழிலகம் ஆதிதிராவிட நலத்துறை இயக்குநர் ஆனந்த் அவர்களிடம் கோரிக்கை மனு அளித்துள்ளார்.



அம்மனுவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது. தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டத்தில் வயலிமிட்டா கிராமத்தில் வசிக்கும் பட்டியலினத்தில் சொந்தமாக வீடு இல்லாத 50 குடும்பங்களுக்கு கடந்த 2002 ம் ஆண்டில் 2 ஏக்கர் நிலம் ஆதிதிராவிடர் நலத்துறை மூலமாக விலைக்கு வாங்கப்பட்டு அதற்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளது.

அந்த 2 ஏக்கர் நிலத்தினை தனிநபர் ஒருவர் ஆக்கிரமிப்பு செய்து கோவிலும் நிலம் முழுமையாக ஆக்கிரமிப்பு செய்ய ப்பட்டு சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டுள்ளது குறித்தும், புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி வட்டம், வாணக்கன்காடு கிராமத்தில்வசிக்கும் சுமார் 60 பட்டியலின மக்கள் கடந்த 100 ஆண்டுகளாக பயன்படுத்தி வரும் மயானம் அதே ஊரைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் தனிநபர் ஆக்கிரமிப்பு செய்துள்ளது.

இச்சம்பவம் குறித்து சென்னை எழிலகம் ஆதிதிராவிட நலத்துறையின் இயக்குநர் ஆனந்த் அவர்களிடம் உரிய நடவடிக்கைஎடுக்கவலியுறுத்தி கோரிக்கை மனு அளித்துள்ளார்.



# தளிஅள்ளி ஊராட்சியில் அ.தி.மு.க. பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம்!

## ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன் தலைமை நடைபெற்றது!!

கிருஷ்ணகிரி,நவ.9

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதி, காவேரிப்பட்டணம் வடக்கு ஒன்றியம், தளிஹள்ளி ஊராட்சியில், அ.தி.மு.க.,வின் வளர்ச்சி பணிகள் குறித்தும், மக்கள் பணிகள் குறித்தும், பூத் கமிட்டி ஆலோசனை கூட்டம் நேற்று நடந்தது. அ.தி.மு.க., துணை பொதுச்செயலாளர் முனுசாமி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஆலோசனை கூட்டத்தில், தளிஹள்ளி, மாரிசெட்டிஹள்ளி, பாளேகுளி, எருமாமம்பட்டி, பென்னேஸ்வரமடம், நெடுங்கல், ஆவத்துவாடி, தட்ரஹள்ளி, மருதேரி, விளங்காமுடி, வீரமலை உள்ளிட்ட 11 ஊராட்சிகளுக்கு உட்பட்ட பூத் கமிட்டி நிர்வாகிகள், தகவல் தொழில் நுட்ப நிர்வாகிகள் மற்றும் மாவட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இதில் ஒவ்வொரு பூத் கமிட்டி நிர்வாகிகளும் கடந்த நான்கரை ஆண்டுகள் தி.மு.க., அரசின் மக்கள் விரோத போக்கு மற்றும் செயல்பாடுகள் குறித்தும், அதேபோல் அ.தி.மு.க., ஆட்சியல் மக்களுக்கு நிறைவேற்றப்பட்ட நல திட்டங்கள் மற்றும் உதவிகள் குறித்தும் வீடு, வீடாக சென்று திண்ணை பிரச்சாரம் செய்து, ஓட்டு சேகரிக்க வேண்டும் என்று கூட்டத்தில் கலந்து கொண்ட பூத் நிர்வாகிகளிடம் தெளிவாகஎடுத்துகூறப்பட்டது. இதில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் அசோக்குமார், காவேரிப்பட்டணம் ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன் மற்றும் ரவிச்சந்திரன், மாதையன், அண்ணாதுரை, திருமால், மஞ்சுநாதன், இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை மணிகண்டன், சுவேந்திரன் உள்ளிட்ட மாவட்ட மற்றும் ஒன்றிய, கிளைகழக பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை சார்பில் ஆட்டோ வாகனம் வாங்க மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் திருமதி. ராஜலட்சுமி என்பவருக்கு ஆட்டோ வாகனத்தினை மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/தொழிலாளர் நலத்துறை இயக்குநர் எஸ்.ஏ.இராமன், மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தலைமையில் வழங்கினார். உடன் தொழிலாளர் இணை ஆணையர் ரமேஷ், தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி) மீனாட்சி உட்பட பலர் உள்ளனர்.

# மனித சமூக விழிப்புணர்வு அமைப்பின் சார்பில் நடந்த முப்பெரும் விழா!

## தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்க தலைவர் சரவணன் பங்கேற்பு!!






சேலம் நவ 9,

மனித சமூக விழிப்புணர்வு அமைப்பின் முப்பெரும் விழா சேலம் மாவட்டம் பொறியாளர்கள் சேவை அறக்கட்டளையில் நிறுவனர் விஜயபாண்டி தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம் தலைவர் சரவணன் கலந்துக் கொண்டார்.

இந்த நிகழ்வில் அடையாள அட்டை வழங்குதல், சிறந்த சமுக சேவை செய்தவர்களுக்கு விருது வழங்குதல்,என முப்பெரும் விழாவாக கொண்டாடப்பட்டது. இதில் அடையாள அட்டைகளை இவ்வமைப்பின் மாநில மகளிரணி செயலாளர் முனைவர் ஜோதி வழங்கினார்.

சிறந்த முறையில் சமூக சேவையாற்றிய வர்களுக்கு இவ்வமைப்பின் நிறுவனத்தலைவர் விஜயபாண்டியன்மற்றும்சிறப்பு விருந்தினர் தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கத்தின் தலைவர் சரவணன் உள்ளிட்டோர் விருதுகளை வழங்கி சிறப்பித்தனர்.

இதில் உள்ளாட்சி அரசு நாளிதழின் உதவி ஆசிரியரும், சமூக சேவகர் முனைவர் சிவசங்கர் அவர்களுக்கு 54 முறை இரத்த தானம் செய்தமைக்கு "சிறந்த குருதிக் கொடையாளர்" விருதினை பொறுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் அம்மா அரசு நாளிதழ் ஆசிரியர் பாரதிராஜா, மக்கள் மன்றம் ஆசிரியர் சிவக்குமார், ஊராட்சி உதயம் ஆசிரியர் ஜோதி உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்தமுக்கியபிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



# பொதுமக்களிடம் குறை கேட்ட அமைச்சர் மதிவேந்தன்!

ராசிபுரம்,நவ.9

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அடுத்த அத்தனூர் பேரூராட்சியில் ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் டாக்டர். மதிவேந்தன் வீடு வீடாகச் சென்று மக்களின் தீர்க்கப்படாத பிரச்சனைகளுக்கு தீர்வு தரும் பொருட்டு பொதுமக்களிடம் குறைகளை கேட்டு சாலை மற்றும் சாக்கடை வசதி குடிநீர் பிரச்சினை சரியாக உள்ளதா என்று கேட்டறிந்தார் .

பின்பு வேறு ஏதும் தீர்க்கப்படாத பிரச்சனைகள் குறைகள் இருந்தால் என்னிடம் நேரடியாக தொடர்பு கொண்டு உங்கள் குறைகளை கூறுங்கள் உங்கள்குறைகளைதீர்த்து வைக்கிறேன் என்று அமைச்சர் கூறினார்.

இதில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு இல்லந்தோறும் நோட்டு புக் இலவசமாக வழங்கி அனைவரும் நன்றாக கல்வி பயின்று வர வேண்டும் என்று பள்ளி மாணவ மாணவிகளுக்கு அறிவுறுத்தினார்.

பின்பு அப்பகுதியில் உள்ள சில்லி சிக்கன் கடையில் சாப்பிட்டு ருசித்து சுவையாக உள்ளது என்று கடை உரிமையாளரை வெகுவும் பாராட்டினார்.

நிகழ்வில் ஒன்றிய அட்மா குழு தலைவரும் ஒன்றிய கழக செயலாளர் ஆர், எம் ,துரைசாமி, பேரூராட்சி செயல் அலுவலர் விஜயன், பேரூர் கழக செயலாளர் கண்ணன் , பேரூர் துணை செயலாளர் விஜயகுமார் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



## ஜவ்வாது மலை அடிவாரத்தில்

# தடுப்பணை கட்ட நிலம் வழங்கிய முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்!

## மதியழகன் எம்.எல்.ஏ. பாராட்டு!!

ஊத்தங்கரை நவ.9

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை ஒன்றியத்தில் சிங்காரப்பேட்டை ஊராட்சி ஜவ்வாது மலை அடிவாரத்தில் கடப்பாறை ஆற்றில் வீணாக செல்லும் மழைநீரை சேமிக்க வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் 40 ஆண்டுகால கோரிக்கையாக இருந்து வருகிறது. மக்களின் நீண்ட கால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் தண்ணீரை சேமிக்கும் பொருட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, இதற்கு சிங்காரப்பேட்டை ஊராட்சிமன்ற முன்னாள் தலைவர் எம்.அஹமத் பாஷா தனக்கு சொந்தமான 17 சென்ட் நிலத்தை தடுப்பணை கட்ட வசதி அந்த பகுதியில் வழங்கியுள்ளார். இதனால் மழை நீரை சேமிக்கவும், ஊராட்சியில் உள்ள ஏரிகளுக்கு கால்வாய் மூலம் நீரை எடுத்து செல்வதும் வசதியாக இருக்கும். மக்கள் பயன்பாட்டிற்காக தனது நிலத்தை வழங்கிய ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் அஹமத் பாஷாவை வரவழைத்து பர்கூர் சட்டமன்ற உறுப்பினரும் திமுக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளருமான தே. மதியழகன் தனது அலுவலகத்தில் அவருக்கு சால்வை அணிவித்து பாராட்டு தெரிவித்தார். உடன் திமுக ஒன்றிய செயலாளர்கள் எக்கூர் செல்வம், மூன்றாம்பட்டி எஸ் குமரேசன் ,மாவட்டத் துணைச் செயலாளர் சந்திரன், முன்னாள் தலைவர் சேட்டு ஆகியோர் உள்ளனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் ஒன்றியம் பர்கூர் சட்டமன்ற தொகுதி வடக்கு ஒன்றிய அ.தி.மு.க. சார்பில் பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளரும், கிருஷ்ணகிரி சட்ட மன்ற உறுப்பினர் கே.அசோக்குமார் தலைமையில் நடந்தது. இதில் கே.பி.முனுசாமி எம்.எல்.ஏ. பேசினார்.

## ஊத்தங்கரை அருகே

# பழுதடைந்த சாலையை சீரமைக்க கோரிக்கை!

ஊத்தங்கரை நவ.9

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த பெரிய கொட்டக்குளம் ஊராட்சியில் சோலையூர், செட்டிப்பட்டி, செங்கழநீர் பட்டி, சின்ன கொட்டகுளம், நாகனூர்,



வைரம் பட்டி ஆகிய கிராமங்களில் சுமார் 5000–க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர், இந்தப் பகுதியில் செங்கழனிர்பட்டி கூட்ரோடு முதல் செங்கழநீர் பட்டி, சோலையூர் செட்டிப்பட்டி, வைரம்பட்டி, கொட்டக்குளம் ஆகிய கிராமங்களை இணைக்கும் இந்த சாலை மூன்று கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது, இந்த தார் சாலை கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக பழுதடைந்து கரடு முரடாகவும், ஜல்லி கற்கள் பெயர்ந்து ,மிகவும் மோசமான விபத்து சாலையாக மாறி உள்ளது, இந்த சாலை வழியாக தான் அப்பகுதியைச் சேர்ந்த நகரப் பகுதி என ஊத்தங்கரைக்கும், போச்சம்பள்ளி சிப்காட் தொழிற்சாலைகளுக்கும், பள்ளி கல்லூரி செல்லும் மாணவர்களும் இந்த சாலை வழியாக தான் பயணம் செய்து வருகின்றனர் ,மிகவும் கரடு முரடாக உள்ள இந்த சாலையில் அடிக்கடி குழியில் விழுந்து பொதுமக்கள் விபத்துக்கு ஆளாகின்றனர், ஆகையால் இந்த சாலையை சீரமைத்து தர மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்,

## வாணியம்பாடியில்

# ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்தில் பெண் தர்ணா!

## பணி ஆணை இருந்தும் சேர்க்க அதிகாரி மறுப்பு!!



வாணியம்பாடி, நவ.9

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அம்பூர்பேட்டை பகுதியில் வசித்து வருபவர் சசிகலா. இவருக்கு 2018 ஆம் ஆண்டு முருகன் என்பவருடன் திருமணம் நடைபெற்று 6 வயதில் பிர்திவி என்ற மகனும், 4 வயதில் விஷ்ணு பிரியா என்ற மகள் உள்ளார். கணவர் முருகன் கடந்த 2021 ஆம் ஆண்டு கொரோனா நோய் தாக்கத்தால் உயிரிழந்துள்ளார்.

இதன் காரணமாக சசிகலா தன்னுடைய தாய் வீட்டில் வசித்து வருகிறார். இந்நிலையில் சசிகலா வாணியம்பாடி பைபாஸ் சாலையில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்தில் கடந்த 22.4.2025 தேதி அங்கன்வாடி பணியாளர் பணிக்காக நேரில் சென்று மனு அளித்துள்ளார். அதற்காக நேர்காணலுக்கும் சென்று வந்துள்ளார். கடந்த 24.10.2025 ஆம் தேதி தபால் மூலமாக அங்கன்வாடி பணியாளர் பணிக்கான ஆணை வந்துள்ளது. அதில் 27.10.2025 தேதி பணியில் சேர குறிப்பிட்டு இருந்தது. இதனை தொடர்ந்து சசிகலா வேலைக்கான ஆணையை எடுத்துக்கொண்டு வாணியம்பாடியில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்திற்கு சென்று அங்கே கண்காணிப்பாளர்தனலட்சுமிஇடம்பணிக்கானஆணையை கொடுத்துள்ளார்.

இந்த பணி குறித்து மேல் அதிகாரியை சந்தித்து பேச வேண்டும் என்று கூறி சசிகலாவை அனுப்பி வைத்துள்ளார். இதனை தொடர்ந்து சசிகலா 10 க்கும் மேற்பட்ட முறை மேல் அதிகாரியை சந்திக்க மாவட்ட அலுவலகத்திற்கு சென்று அவர் கிடைக்காததால் தனுக்கு அங்கன்வாடி பணியாளர் பணி ஆணை அடிப்படையில் வேலை வழங்க வேண்டும் என்று கூறி வாணியம்பாடி ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலக வளாகத்தில் மகளுடன் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார்.

# வேதாங் ரெய்னா மற்றும் குஷி கபூருடன் இணைந்து “டெய்லர்டு ஃபார் தி குட் லைஃப்” பிரச்சாரத்தை ஆரோ அறிமுகம் செய்கிறது!



சென்னை,நவ.9

ஆடவர் ஆடை உலகின் முன்னணி பிராண்டான ஆரோ, நடிகர்கள் வேதாங் ரெய்னா மற்றும் குஷி கபூர் இணைந்து நடித்துள்ள புதிய பிரச்சாரம் *“Tailored for the Good Life”*ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. நியூயார்க் நகரத்தை பின்னணியாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த நிகழ்ச்சி, ஆரோவின் அமெரிக்க பாரம்பரியத்தை நவீன தலைமுறைக்கே உரிய ஸ்டைல், நேர்த்தி மற்றும் உயர் ரசனையுடன் இணைக்கிறது. இந்த காட்சிகளில், வேதாங் ரெய்னா நம்பிக்கையுடனும் ஸ்டைலுடனும் ‘ஆரோ மேன்’ உருவத்தை வெளிப்படுத்துகிறார்; அதேவேளை, குஷி கபூர் தனது இயல்பான ஸ்மார்ட் நேர்த்தியைக் கொண்டு கதையை நிறைவு செய்கிறார். இவர்கள் இருவரும் சேர்ந்து, வெற்றியோடு வாழ்வை ரசிக்கும் வாழ்க்கைமுறை சார்ந்த அணுகுமுறையை பிரதிபலிக்கின்றனர். பிரச்சாரம் குறித்து, ஆரோ இந்தியாவின் தலைமைச் செயல் அதிகாரி திரு. ஆனந்த் ஐயர் கூறுகையில், “*‘Tailored for the Good Life’* என்பது எங்கள் அமெரிக்க மரபையும், இன்றைய ஆண்களின் எதிர்பார்ப்புகளையும் ஒருங்கிணைக்கிறது. வேதாங் மற்றும் குஷி நவீன நுகர்வோரை பிரதிநிதித்துவப்படுத்தும் சிறந்த தேர்வு,” எனத் தெரிவித்தார்.

# பொது அறிவிப்பு

கோயம்புத்தூர் -641025 தடாகம் ரோடு இடையர்பாளையம் (அஞ்சல்) சிவாஜி காலனி சௌடாம்பிகா நகர் முதல் தெரு கதவு எண் 122-ல் வசித்து வரும் திரு (லேட்) வீரன் மகன் **வீ.புஷ்பானந்தம்** ஆகிய நான் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில் திரு அந்தோணி சாமி பெயரில் கடந்த 4.5.1987 அன்று காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவான மூலபத்திர எண் 3110/1987 மற்றும் 22.3.1990 அன்று காந்திபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவான அசல் கிரைய பத்திரம் எண் 1695/1990 ஆகிய இரு அசல் பத்திரமானது கடந்த 23 .10. 2025 அன்று கோவை N.S.R. ரோட்டில் காலை 11.00 மணியளவில் ஜெராக்ஸ் எடுக்க செல்லும் பொழுது அசல் பத்திரம் காணாமல் போய்விட்டது. மேற்படி அசல் கிரைய மற்றும் மூல பத்திரத்தினை அக்கம் பக்கத்தில் தேடி நாளனது தேதி வரை கிடைக்கப் பெறவில்லை. மேற்படி அசல் பத்திரத்தினை கண்டு எடுத்தவர்கள் என்னிடம் ஒப்படைக்குமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேற்படி பத்திரத்தினை யாரேனும் வில்லங்க விவகாரத்திற்கு உட்படுத்தினால் அவர்கள் மீது சிவில் மற்றும் கிரிமினல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

கதவு எண் 122 ,
சௌடாம்பிகா நகர்,
முதல் தெரு, சிவாஜி காலனி,
இடையார்பாளையம் அஞ்சல்
தடாகம் ரோடு, கோவை- 64 10 25

**V. புஷ்பானந்தம்**
வழக்கறிஞர்
செல் :99 94 68 42 48
97 51 38 93 68



கோபி செட்டிபாளையம் பகுதியில் பயிரிடப்பட்டுள்ள வாழைகளுக்கு விவசாயிகள் பூச்சி கொல்லி மருந்து தெளிப்பதை படத்தில் காணலாம்.



தர்மபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் தொடர்ந்து 4 வது நாளாக வினாடிக்கு 6500 கன அடியாக தொடர்கிறது. இதனால் சுற்றுலா பயணிகள் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் குளித்தும் பரிசல் பயணம் செய்தும் மகிழ்ந்து வருகின்றனர்.

# 3 பேருக்கு மேல் டெங்கு பாதிப்பு இருந்தால் களப்பணியாளருக்கு ரூ.200 அபராதம்!

## பொது சுகாதாரத் துறை எச்சரிக்கை!!

சென்னை, நவ.9

.டெங்கு காய்ச்சலை பரப்பும், ‘ஏடிஸ் எஜிப்டை’ வகை கொசுக்கள், மழை மற்றும் குளிர் காலங்களில் அதிகமாக பெருக்கமடைகின்றன. மாநிலம் முழுதும் இதுவரை, 17,000க்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர். பருவமழை தொடர்வதால், வரும் ஜனவரி வரை டெங்குதாக்கம் அதிகமாக இருக்கும் என, மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். எனவே, டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்தும் வகையில், 23,000க்கும் மேற்பட்ட கொசு ஒழிப்பு பணியாளர்கள், களப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.வீடுகள், பொது இடங்களில், ‘ஏடிஸ்’ வகை கொசு உருவாக்கத்தை கண்டறிந்து, இவர்கள் அழித்து வருகின்றனர். மேலும், டெங்குபாதிக்கப்படும்பகுதிகளில், கொசு ஒழிப்பு பணியை தீவிரப்படுத்துகின்றனர். இந்நிலையில், ஒரு பகுதி அல்லது கிராமத்தில், ஒரே நேரத்தில் மூன்று பேருக்கு மேல் டெங்கு பாதிப்பு ஏற்பட்டால், அப்பகுதி களப்பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க, பொது சுகாதாரத் துறை அறிவுறுத்தி உள்ளது.அதன்படி, சென்னை மாநகராட்சி உட்பட பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளில், கொசு ஒழிப்பு பணியை முறையாக செய்யாத களப்பணியாளர்களுக்கு, 200 ரூபாய் அபராதம் மற்றும் ஒரு நாள் சம்பளம் ரத்து என, தண்டனை வழங்கப்பட்டு வருகிறது.



# வாணியம்பாடியில் மழைநீர் கழிவு நீரோடு தேங்கி நிற்பதை மாவட்ட கண்காணிப்பு அதிகாரி!

வாணியம்பாடி, நவ.9

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகரம் மற்றும் கிராமப்புற பகுதிகளில் பல இடங்களில் நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் செல்ல முடியாத நிலை ஏற்பட்டு அரசு மருத்துவமனை மற்றும் தேசிய நெடுஞ்சாலைகளில் மழை நீரோடு கழிவுநீர் தேங்கி நிற்கும் அவல நிலை ஏற்படுகிறது.

இது குறித்து வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் கோ.செந்தில்குமார் மாவட்ட ஆட்சியர் மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் பலமுறை ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரிக்கை வைத்தும் துறை சார்ந்த அதிகாரிகள் அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதனை தொடர்ந்து இன்று மாவட்ட கண்காணிப்பு அதிகாரியும் போக்குவரத்து ஆணையாளருமான கஜலட்சுமி தலைமையிலான அதிகாரிகள் வாணியம்பாடி அரசு மருத்துவமனை மற்றும் வளையாம்பட்டு, செட்டியப்பனூர் கூட்டுச்சாலை ஆகிய இடங்களில் மழைநீர் கழிவு நீரோடு தேங்கி நிற்பதை ஆய்வு மேற்கொண்டு அதற்கான நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

அப்போது பொதுப்பணித்துறை அதிகாரிகள் நகரப் பகுதியில் அதிகளவில் ஆக்கிரமிப்புஉள்ளதாகவும்ஒருகிலோமீட்டர் அளவிற்கு ஆக்கிரமிப்பு அகற்றாமல் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்கு போக்குவரத்து ஆணையர் நகராட்சி கமிஷனர் மற்றும் வருவாய்த்துறையினரோடு இணைந்து முழுமையாக நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். அப்போதுதான் நீர்நிலைகளில் செல்லக்கூடிய கால்வாய்கள் முறையாக இருக்கும். இது குறித்து நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேலும் தேசி நெடுஞ்சாலைகள் அதிகளவில் விபத்து ஏற்படும் இடங்களையும் அவர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது மாவட்ட ஆட்சியர் சிவசௌந்திரவல்லி, சட்டமன்ற உறுப்பினர் கோ.செந்தில் குமார், வட்டாரப் போக்குவரத்து அலுவலர் வெங்கட் ராகவன் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# திருமூர்த்திமலையில் நயினார் நாகேந்திரன் சாமி தரிசனம்!

உடுமலை,நவ.9

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் நேற்று உடுமலை அருகே



உள்ள திருமூர்த்திமலை அமணலிங்கேஸ்வரர் கோவிலுக்கு வருகை தந்தார். பின்னர் விநாயகர், மும்மூர்த்திகள், கன்னிமார், முருகன், நவகிரகங்கள் உள்ளிட்ட கடவுள்களை மனமுருகி வழிபாடு செய்தார். அப்போது அவருக்கு சிறப்பு மரியாதை அளிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக செய்தியாளர் சந்திப்பில் நயினார் நாகேந்திரன் கூறியதாவது, தமிழக அரசு பொதுக் கூட்டங்கள் ரோடு ஷோ மற்றும் தேர்தல் சம்பந்தமான கூட்டங்கள் தொடர்பாக வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் குறித்து விசிக தலைவர் திருமாவளவன் அறிக்கை வெளியிட்டு உள்ளதால்திமுகவிடுதலை சிறுத்தைகள் கட்சி கூட்டணியில் விரிசல் ஏற்பட்டுள்ளதோ என்று தோன்றுகிறது. பாலியல் வன்கொடுமை நிகழ்வு நடைபெற்றுள்ள சூழலில் நேற்று 2வது முறையாக கோவையில் பெண் கடத்தப்பட்டு உள்ளார். தொடர்ச்சியான சம்பவங்கள் பெண்களுக்கு பாதுகாப்பற்ற நிலையை காட்டுகிறது. திமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கு

சீர்கெட்டு உள்ளதற்கு இதுவே சான்று.வருகின்ற தேர்தலில் எங்களது கூட்டணி அமோக வெற்றி பெறும். பீகார் தேர்தலில் பாஜக அமோக வெற்றி பெறும் என்று தெரிவித்தார். இந்த நிகழ்வில் மாநில பொதுச்செயலாளர் ஏ.பி. முருகானந்தம், உடுமலை நகர தலைவர் அருணாச்சல் பாலகுரு,தெற்கு ஒன்றிய தலைவர்துர்காஈஸ்வரசாமி, கோவில் செயல் அலுவலர் அமரநாதன் மற்றும் பணியாளர்கள் உடன் இருந்தனர்.